# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


1-3-2010

**சென்னை சோழவரம் ஞாயிறு கிராமத்திற்கு அருகில் உள்ள பூதூரில் இந்து முன்னணி பொறுப்பாளர் படுகொலையைக் கண்டித்தும், கொலைசெய்த முஸ்லீம் மத பயங்கரவாதிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கக் கோரியும் இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அறிக்கை!**

சென்னை சோழவரம் ஞாயிறு கிராமத்திற்கு அருகில் உள்ள பூதூரில் சர்வேஸ்வர பாபா என்னும் சித்த மகாபுருஷர் வந்து தங்கி, வாழ்ந்து சமாதி அடைந்தார். அந்த மகானுக்கு அருந்தொண்டாற்றியவர் ஸ்ரீமதி கஜலட்சுமி அம்மாள் (கணவர் பெயர் திரு. கோவிந்தசாமி நாயுடு) அவர்கள், மகான் மறைவுக்குப் பிறகு அவரது இடத்தில் சமாதி அமைத்து, சர்வேஸ்வர பாபா குரு வழிபாட்டிற்காகத் தனது சொத்தை அளித்து சர்வேஸ்வரா அறக்கட்டளையை ஏற்படுத்தியதும் அவரே! அதில் சாட்சிக் கையெழுத்திட்டிருப்பவர் அவரது மகனும் தற்போதும் டிரஸ்டில் இருந்து வருபவருமான திரு. சேமாத்திரி அவர்கள்.

அந்த மகான் இந்து என்பதும், சர்வேஸ்வரா எனும் மகாமந்திரத்தையே பக்தர்களுக்கு உபதேசித்து வந்தார் என்பதும் அனைவரும் அறிந்ததே! கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் சில முஸ்லீம்கள் சர்வேஸ்வர மகானை ஷாகின்ஷா பாபா என்றும் அவர் முஸ்லீம் என்றும் கதையைத் திரித்துக்கூறி சர்வேஸ்வரா டிரஸ்ட் இடத்தை அபகரிக்க முயற்சித்தார்கள். அந்த சர்வேஸ்வர பாபா சமாதியில் உட்கார்ந்துகொண்டு இந்துக்களுக்கு அச்சுறுத்தல் கொடுத்து வந்தார்கள்.

இதன் பிறகு வழக்கு காவல்துறைக்கும், கோர்ட்டுக்கும் சென்றது. அந்த மகான் இந்து என்பதும், அவருக்குத் தொண்டாற்றியவர் இந்து என்பதும், அவருக்குச் சமாதி அமைத்து வழிபாடு செய்வது இந்துக்கள் என்பதும் உறுதியானது. இவ்வழக்கைத் தொடுத்தவர் அறங்காவலர்களுள் ஒருவரான திரு. பொன்னன் அவர்கள். இருந்தும் உயர்நீதிமன்றம் இரு மதத்தினரும் சுமுகமாக வழிபாடு நடத்திட அனுமதி வழங்கியுள்ளது.

சோழவரம் பகுதியில் கடந்த சில வருடங்களாக முஸ்லீம் மதவாத பயங்கரவாதிகள் நடமாட்டம் அதிகரித்து வந்துள்ளதாகவும், பெண்களைக் கடத்தி வந்து கட்டாய மதமாற்றம் செய்வதாகவும் தகவல்கள் வந்தன. இது குறித்து காவல்துறைக்கும் அவ்வப்போது தகவல் கொடுக்கப்பட்டு வந்தது. மதுரை மேலப்பாளையம், திருநெல்வேலி போன்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி வந்து தங்கி குற்றச் செயல்கள் புரிவதாகத் தெரியவந்தது.

இந்நிலையில் இந்து முன்னணி ஒன்றியச் செயலராக இருந்தவரும், சித்த புருஷர் சர்வேஸ்வர பாபா அவர்களின் வழிபாட்டு கமிட்டியில் இருந்தவருமான திரு. மூர்த்தி அவர்கள் (வயது 39) 27-2-2008 அன்று காலை 10 மணி சுமாருக்குப் பாபா கோயிலில் விளக்கேற்றி வழிபாடு செய்துவிட்டு வெளியில் வந்தபோது முஸ்லீம் பயங்கரவாதிகள் கழுத்தை அறுத்து படுகொலை செய்துள்ளனர்.

திரு. மூர்த்தி அவர்கள் கொலையாவதற்குச் சில தினங்கள் முன்பு தனது சகோதரியிடம் தனக்கு முஸ்லீம் பயங்கரவாதிகளால் மிரட்டல் இருப்பதாகவும், தன்னைக் கொன்றுவிட திட்டம் தீட்டுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலைக்குக் காரணம் முஸ்லீம் பயங்கரவாதிகளின் திட்டமிட்ட சதி தான். முஸ்லீம் பயங்கரவாதிகளை ஊக்கப்படுத்தியும், அவர்கள் குற்றச் செயல்களுக்குப் பக்கபலமாகவும் இருப்பவர்கள் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் யாசிம் அலி, சென்னை ஆடுதொட்டி ஹெச். ஹாரூண், தென்காசி எம்.பி. ஜே.எம். ஹாரூண் போன்றவர்கள் என்பது அப்பகுதி மக்களின் பலத்த சந்தேகம்.

சர்வேஸ்வரா என்று மந்திர உபதேசம் செய்த மகான் முஸ்லீம் என்று சொல்வதும், இந்துப் பெண்மணி எழுதிவைத்த சொத்திற்குப் (மொத்தம் 64 சென்ட்) பேராசை கொண்டு இந்துக்களை மிரட்டி வருவதும், திரு.மூர்த்தி அவர்களைக் கொலை செய்துள்ளதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது! சமூக விரோத செயல்களில் ஈடுபடும் ரௌடிகளை என்கவுண்டர் செய்யும் காவல்துறை முஸ்லீம் பயங்கரவாதிகளை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்காசி படுகொலைக்குப் பிறகு வெளியில் வராமல் இருந்த முஸ்லீம் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குகிறது. இதனால் தமிழகத்தின் அமைதி, நல்லிணக்கம் கெட்டுவிட இடம் தரக்கூடாது! சமீபகாலமாக தமிழகத்தில் முஸ்லீம் பயங்கரவாத இயக்கங்கள் வேறுவேறு பெயர்களில் தலைதூக்கி வருகின்றன. இதில் யார் பெரியவன் என்ற போட்டியும் வெளிப்படையாக நடந்துவருவதை காவல்துறை கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம். இதுபோன்ற சமூக விரோத செயல்களுக்கு முஸ்லீம் மதவாத அமைப்புகள் பக்க பலமாகச் செயல்படுகின்றன!

தமிழக முதல்வர் உடன் தலையிட்டு இந்தக் கொலைக்குக் காரணமானவர்களையும், பின்புலத்தில் செயல்படுபவர்களையும் கைது செய்து தக்க தண்டனை வழங்க நடவடிக்கை எடுத்து பொது அமைதி பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுகிறோம். முஸ்லீம் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட திரு. மூர்த்தி குடும்பத்திற்குத் தக்க நிவாரணம் வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**